செ.வெ.எண்:36 நாள்:27.6.2015

**சிறுபான்மையின மாணவ/மாணவியர்களுக்கு 2015-2016ஆம் ஆண்டிற்கு பள்ளிப்படிப்பு (Prematric Scholarship) கல்வி உதவித்தொகை பெற விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன - மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர் மா.மதிவாணன் இ.ஆ.ப அவர்கள் தகவல்**

தமிழ்நாட்டில் உள்ள அரசு, அரசு உதவி பெறும் மற்றும் அரசால் அங்கீகரிக்கப்பட்ட கல்வி நிலையங்களில் 1-ம் வகுப்பு முதல் 10-ம் வகுப்பு வரை பயிலும் கிறித்துவர், இஸ்லாமியர், சீக்கியர், புத்தமதத்தினர், பார்சி மற்றும் ஜெயின் வகுப்பைச் சார்ந்த சிறுபான்மையின மாணவ/மாணவியர்களுக்கு பள்ளிப்படிப்பு கல்வி உதவித்தொகை ( Prematric Scholarship) திட்டத்தின் கீழ் 2015-16ஆம் ஆண்டிற்கு கல்வி உதவித்தொகை பெற விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

இத்திட்டத்தின் கீழ் கல்வி உதவித்தொகை பெற மாணவ/மாணவியரின் பெற்றோர் /பாதுகாவலரது ஆண்டு வருமானம் ரூ.1.00 இலட்சத்திற்கு மிகாமல் இருத்தல் வேண்டும். மாணவ/மாணவியர் முந்தைய ஆண்டின் இறுதித் தேர்வில் (ஒன்றாம் வகுப்பு நீங்கலாக) 50 விழுக்காடு மதிப்பெண்களுக்கு குறையாமல் பெற்று தேர்ச்சி பெற்றிருத்தல் வேண்டும். பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை, ஆதிதிராவிடர் நலத்துறை, மற்றும் இதர துறைகள் நலவாரியங்கள் மூலம் 2015-16ஆம் ஆண்டில் கல்வி உதவித்தொகை பெறுதல் கூடாது.

1 முதல் 8ஆம் வகுப்பு மாணவ/மாணவிகள் புதியது (Fresh) மற்றும் புதுப்பித்தல் (Renewal) கல்வி உதவித்தொகை விண்ணப்பங்களை www.bcmbcmw.tn.gov.in என்றஇணையதள முகவரியிலிருந்து படியிறக்கம் செய்து அதனை பூர்த்தி செய்து தாங்கள் பயிலும் கல்வி நிலையங்களில் 15.07.2015க்குள் சமர்ப்பிக்க வேண்டும். 9 மற்றும் 10ஆம் வகுப்பு மாணவ/மாணவியர் www.scholarships.gov.in என்ற இணையதள முகவரியில் ஆன்லைன் மூலம் மட்டுமே விண்ணப்பிக்க வேண்டும். தவிர ஆன்லைனில் விண்ணப்பிக்கும் போது இணைக்க வேண்டிய ஆவணங்களை ஸ்கேன்(Scan) செய்து அப்லோடு(Upload) செய்திட வேண்டும். விண்ணப்பித்தபின் விண்ணப்பத்தை படியிறக்கம்(downloand) செய்து கல்வி நிலையத்தில் 31.07.2015க்குள் சமர்ப்பிக்க வேண்டும்.

கல்வி நிலையங்கள் மாணவ/மாணவியர்களிடமிருந்து பெற்ற விண்ணப்பங்களைச் சரிபார்த்து 1 முதல் 8ஆம் வகுப்பு மாணவர்களுக்கான விவரங்களை அதற்கான கேட்புப்பட்டியலில் பதிந்து திருவாரூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் உள்ள மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலரிடம் 25.07.2015க்குள் சமர்ப்பிக்க வேண்டும். 9 மற்றும் 10ஆம் வகுப்பு விண்ணப்பத்தை ஆன்லைன் மூலம் 31.07.2015-க்குள் பார்வேர்டு(Forward) செய்ய வேண்டும்.

திருவாரூர் மாவட்டத்தில் கல்வி பயிலும் சிறுபான்மையின மாணவ/மாணவியர்கள் மேற்படி கல்வி உதவித்தொகை பெற உரிய காலத்தில் விண்ணப்பித்து பயனடையுமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர் மா.மதிவாணன் இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

வெளியீடு:செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் திருவாரூர்